சார்பு நீதிமன்றம் உத்தமபாளையம்

நாள்: 27.03.2026 SC. 24/2022

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | Dr. அசோக்குமார் | தொழில் | : | |
| தகப்பனார்/ கணவர் பெயர் | : | | வயது | : | |
| விலாசம் | : | | | | |
| | | PW10 | | | |

-------------------------------------------------------------------

முதல் விசாரணை

நான் தற்போது தேனி மருத்து கல்லூரியின் அறுவை சிகிச்சை துறையில் உதவி பேராசிரியராக பணியாற்றி வருகிறேன். நான் 14.08.2020ம் ஆண்டு பணியில் இருக்கும்போது கம்பம் அரசு மருத்துவமனையில் இருந்து மேல்சிகிச்சைக்காக அனுப்பப்பட்ட கம்பம் விவேகானந்தர் தெரு செல்வம் மகன் உதயகுமார், என்பவரை அவரது தாயாரான வசந்தா சிசிக்சைக்கு கொண்டு வந்தார். அவரை அனுமதித்து சிகிச்சை செய்தேன். மேற்படியாரை சிகிச்சை முடித்து 27.08.2020ம் ஆண்டு விடுவித்தேன். அவருக்கு ஏற்பட்ட காயத்திற்கு கொடுங்காயம் என்று சான்று கொடுத்தேன். கத்தி கழுத்தில் ஆழமாக பாய்திருந்ததால், அது கொடுங்காயம் ஆகும். அது சம்பந்தமாக நான் மருத்துவகருத்துரை வழங்கினேன். அது அ.சா.ஆ. 7 ஆகும்.

குறுக்கு விசாரணை

சம்பவம் நடந்த தேதி பற்றி என்னிடம் சொல்லவில்லை என்றால் சரியல்ல. 14.08.2020 என காயம் பட்ட நபர் என்னிடம் கூறினார். போலீஸ் விசாரணையில் கத்தியால் தான் காயம் ஏற்பட்டது என்பது குறித்து நான் சொல்லவில்லை. ஒரு நபர் தடுமாறி கீழே விழுந்து கூர்மையான தகரம் மற்றும் கம்பு ஆகியவற்றில் விழுந்தால் நான் சொல்லியுள்ள காயம் ஏற்பட வாய்ப்பு உள்ளதா என்றால் இல்லை.

M SHIVAJI CHELLIAH

Digitally signed by M SHIVAJI CHELLIAH
Date: 2026.03.27 17:41:45 +0530

சார்பு நீதிபதி

உத்தமபாளையம்